Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.127/2022

**P.W**. 1(LW1)

| | |
|---|---|
| Name | : **திரு.விஜயபுஷ்பன்** |
| Father/Husband Name | : திரு.ராமகிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் நெய்குப்பி கிராமத்தில் குடியிருந்து ஹார்டுவேர்ஸ் கடை வைத்துள்ளேன். விபத்தில் இறந்துபோன பத்மநாபன் என்னுடைய தாய்மாமன் ஆவார்.**

**2) கடந்த 17.04.2019ம் தேதி இரவு சுமார் 8.45 மணியளவில் எங்கள் கடையின் எதிரில் உள்ள பழக்கடையில் பழம் வாங்குவதற்காக சாலையின் ஓரமாக என் தாய்மாமன் பத்மநாபன் நின்றுக் கொண்டிருந்த போது TN 19 AX 2883 என்ற பதிவு எண் கொண்ட யமகா இரு சக்கர வாகனம் வேகமாக வந்து என் தாய்மான் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் என் மாமாவிற்கு பின் தலையிலும் இடது காலிலும் பலத்த காயம் ஏற்பட்டது. உடனே நான் 108 ஆம்புலன்ஸ்சுக்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்தோம். செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலிருந்து என் மாமாவை**

மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு மாறினார்கள். இந்த விபத்து குறித்து 3 நாட்கள் கழித்து 20.04.2019 அன்று சட்ராஸ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் என் மாமாவை மருத்துவமனையில் கவனித்துக் கொண்டிருந்ததால் 3 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

நான் அனுபுரம் கேட் எதிரில் 20 வருடங்களாக கடை வைத்து நடத்தி வருகிறேன். என் கடையில் என் தாய்மாமா பத்மநாபன் மட்டும் தான் வேலை செய்து வருகிறார். நான் பொதுவாக கடையை இரவு 8.30 முதல் 9.00 மணிக்குள் மூடி விடுவேன். என் கடை அனுபுரம் பேருந்து நிறுத்தம் அருகே இருக்கிறது என்றால் சரிதான். அந்த இடத்தில் காவல் துறையினர் தடுப்புகள் வைத்துள்ளார்கள் என்றால் விபத்து நடந்த சமயத்தில் தடுப்புகள் இல்லை. தற்போது தடுப்புகள் வைத்துள்ளார்கள். என் கடைக்கு அருகே 15 முதல் 20 கடைகள் இருக்கும் என்றால் சரிதான். அனுபுரம் கேட் அருகே இரண்டு CISF காவலர்கள் எப்போதும் காவலுக்காக இருப்பார்கள் என்றால் சரிதான். கேட்டிற்குள் இருப்பார்கள். பொதுவாக மாலை நேரத்தில் சம்பவ இடமான அனுபுரம் அருகே அதிகமாக மக்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சத்தம் கேட்ட பிறகு தான் நான் விபத்து நடந்ததை பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் அவரை பார்த்துக் கொண்டிருக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த சமயத்தில் 30 முதல் 40 பேர் வரை இருந்தார்கள் என்றால் சரிதான்.

விபத்து நடந்த அன்றே போலிசாருக்கு நான் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. மருத்துவமனையிலிருந்து தகவல் கொடுத்தார்கள். இந்த வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். போலிசார் 3 நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்த போது என்னுடன் சுரேஷ் இருந்தார். அவரும் சம்பவத்தை நேரில் பார்த்தார். நான் காவல் நிலையத்தில் வாக்குமூலத்தில் எதுவும் கையெழுத்து போடவில்லை. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன நபர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடமானது மக்கள் அதிகமாக பயன்படுத்தக்கூடிய இடம் என்பதாலும், அந்த விபத்தில் வாகனத்தை வேகமாக ஓட்ட முடியாது என்றாலும், எதிரியின் மீது பொய்யாக புகார் கொடுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன பத்மநாபன் சாலையை கடக்கும் போது அவராக தடுக்கி விழுத்து தலையில் காயம் ஏற்பட்டதை வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை என் பொறுப்பில் வைத்துக் கொண்டு 3 நாட்கள்கழித்து நான் தான் காவல் நிலையத்தில் சென்று ஒப்படைத்தேன் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.127/2022

**P.W**. 2(LW2)

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.சுரேஷ்** |
| Father/Husband Name | : | திரு.வாசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.** நான் அனுபுரத்தில் குடியிருந்து கட்டுமான தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பத்மநாபன் என்னுடைய நண்பர்ஆவார்.

2) நான் வழக்கமாக மாலை நேரத்தில் விஜயபுஷ்பன் அவர்களின் கடையில் கட்டுமானத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி செல்வேன். அப்போது கடந்த 17.04.2019 ம் தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு மேல் ஆர்.கே. ஹார்டுவேர்ஸ் கடைக்கு வெளியே நான் வண்டியை நிறுத்திவிட்டு பொருட்களை வாங்குவதற்காக சென்றேன். அப்போது திடீரென்று சத்தம் கேட்டு நான் திரும்பி பார்த்தபோது பத்மநாபனுக்கு விபத்து ஏற்பட்டு அவர் தள்ளிபோய் விழுந்தார். நான் உடனே சென்று அவரை தூக்கினேன். அவருக்கு இடது பக்க காலிலும் பின் தலையிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. உடனே 108 ஆம்புலன்ஸ்

மூலம் அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் TN 19 AX 2883 யமகா வாகனம் ஆகும். வாகனத்தை ஓட்டி வந்த நபரை நான் சரியாக பார்க்கவில்லை. மேல் சிகிச்சைக்காக பத்மநாபனை சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்னர் சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

விபத்து நடந்த இடத்தில் நிறைய கடைகள் இருக்கிறது. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் பேருந்து நிறுத்தம் இருக்கிறது என்றால் சற்று தள்ளி இருக்கிறது. பொதுவாக மாலை நேரத்தில் விபத்து நடந்த இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று அந்த கடையில் சுமார் 4 முதல் 5 நபர்கள் வரை இருந்தார்கள். சத்தம் கேட்ட பிறகு தான் விபத்து நடந்தது தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு அந்த இடத்தில் சுமார் 50 நபர்கள் வரை கூடியிருந்தார்கள். கடையில் இருந்து விஜயபுஷ்பன் நான் சென்று பத்மநாபனை தூக்கிய பிறகு தான் வந்தார் என்றால் சரிதான். 108 ஆம்புலன்சிற்கு நான் தகவல் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. விஜயபுஷ்பன் சம்பவம் நடந்து மறுநாள் புகார் கொடுத்தாக என்னிடம் சொன்னார். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் 2 நாட்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள். என்னை விசாரணை செய்தபோது என்னுடன் விஜயபுஷ்பன், மணவாளன், ஆகியோர் இருந்தார்கள். இந்த விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் விபத்தில்

இறந்துபோன நபர் குடும்ப நண்பர் என்பதால் பார்க்காத விபத்தினை நான் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.127/2022

**P.W**.3(LW3)

| | |
|---|---|
| Name | : திரு.உன்னிகிருஷ்ணன் |
| Father/Husband Name | : திரு.கோவிந்தன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் சட்ராசில் குடியிருந்து கல்பாக்கத்தில் டீ கடை வைத்துள்ளேன். விபத்தில் இறந்துபோன பத்மநாபன் என்னுடைய உறவினர் ஆவார்.

2) கடந்த 27.04.2019 ம் தேதி இரவு 8.45 மணியளவில் ( சாட்சி 17.04.2019 என்று தற்போது தேதியை மாற்றி சொல்கிறார்) பத்மநாபன் பழம் வாங்குவதற்காக விஜயபுஷ்பன் கடைக்கு எதிரே இருக்கும் பழக்கடைக்கு செல்லும் போது சத்தம் கேட்டது. சத்தம் கேட்டவுடனே நான் பார்த்தபோது பத்மநாபனுக்கு விபத்து ஏற்பட்டிருந்தது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய நபர் யார் என்று எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனம் யமகா வாகனம் பதிவு எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. விபத்தில் பத்மநாபனுக்கு பின் தலையிலும் காலிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. 108 ஆம்புலன்ஸ் மூலம் வரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு

கொண்டு சென்று சேர்த்தார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். அவரை மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜுவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். பிறகு அவர் சிகிச்சை பலனில்லாமல் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் கல்பாக்கத்தில் டீ கடை வைத்துள்ளேன். நான் காலை 8 மணிக்கு கடை திறந்து இரவு 8 மணி முதல் 10 மணிக்குள் கடையை மூடுவேன். என் டீ கடையில் 3 பேர் வேலை செய்கிறார்கள். சத்தம் கேட்ட பின்பு தான் நான் விபத்து நடந்ததை தெரிந்துக் கொண்டேன். நான் சென்று பார்த்த பின்புதான் விஜயபுஷ்பன் அந்த இடத்திற்கு வந்தார். விபத்து நடந்த போது சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன நபர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த பிறகு சுமார் 30 முதல் 40 பேர் வரை கூடியிருந்தார்கள் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.127/2022

**P.W**.4(LW5)

| | |
|---|---|
| Name | : **திரு.மணவாளன்** |
| Father/Husband Name | : திரு.துரைசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**எதிரி ஆஜரில் உள்ளார்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது அனுபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி கண்ணன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.

2) கடந்த 20.04.2019 ம் தேதி மதியம் 3.30 மணியளவில் அனுபுரம் கேட்டு எதிரே RK ஹர்டுவேர்ஸ் கடை அருகே விபத்து ஏற்பட்டதாகவும் அந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைவதாகவும், அதற்கு சாட்சியாக இருக்கும்படி போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நானும் சாட்சி கண்ணன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

நான் தமிழ்நாடு அரசில் வேலை பார்த்து ஓய்வு பெற்று அனுபுரம் நெய்குப்பி கிராமத்தில் வசித்து வருகிறேன். தட்டச்சு செய்யப்பட்ட தாளில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மாதிரி வரைபடம் எழுதப்பட்டிருந்தது. நான் கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மாதிரி வரைபடத்திற்காக அது பற்றி எழுதியிருந்த தாளில் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். கையெழுத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றாலும் விபத்தில் இறந்துபோன நபர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.